# தொண்டமானாறு தனு வெளியீட்டகம்


**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை**
**வினாத்தாள் I இற்கு பயிற்றுவிப்பதற்கான பரீட்சை - 2020**

**எண்: 1** **விவேகப்பரீட்சை** **12 நிமிடங்கள்**

✷ 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கீறிடுக.


❖ *1, 2 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு அடைப்புக்களிலும் உள்ள இரு உருக்களுக்குமிடையில் இரண்டு வித்தியாசங்கள் மட்டும் உள்ள அடைப்பைத் தெரிவு செய்க.*

1.



(1) (2) (3)

2.



(1) (2) (3)

❖ *தரப்பட்ட சோடிச் சொற்களுக்கிடையிலான தொடர்புகளுக்கமைய 3, 4 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.*

3. | விருந்து - விருது | படலம் - படம் |

இத்தொடர்புகளுக்கமைய அமைந்து வரும் இன்னொரு சோடி

(1) | விரதம் - விதம் | (2) | வாரணம் - வாரம் | (3) | கவனம் - வனம் |


4. | சந்தனம் - தசம் | கடிகாரம் - காகம் |

இத்தொடர்புகளுக்கமைய அமைந்து வராத ஒரு சோடி

(1) | தரிசனம் - சதம் | (2) | வந்தனம் - தவம் | (3) | விருட்சம் - விசம் |


❖ *5, 6 ஆகிய வினாக்களில் ஓர் உருவும் அது முகம்பார்க்கும் கண்ணாடி முன் நேரே காட்டும் பொழுது தோன்றும் வடிவம் புள்ளிக்கோட்டிற்கு அடுத்ததாகவும் தரப்படுகின்றது. இவற்றில் சரியானதைத் தெரிவு செய்க.*

5.



(1) (2) (3)

6.



(1) (2) (3)

❖ *பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.*

பண்டைக்கால மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான். இதனால் நோயின்றி நீண்டநாள் வாழ்ந்தான். ஆனால் இன்றைய நிலை என்ன? பெருகிவரும் தொழிற்சாலைகளும் போக்குவரத்து சாதனங்களும் காற்றை மாசுபடுத்துகின்றன. அவற்றின் இரைச்சலால் செவிப்புலன்களும் பாதிக்கப்படுகின்றன. மாசடைந்த சுற்றுப்புறச்சூழலில் புதுப்புது நோய்கள் தோன்றுவது வழமையாகிவிட்டது.

7. நோயின்றி நீண்டநாள் வாழ்வதற்கான வழி
   (1) தொழிற்சாலைகளையும் போக்குவரத்துச் சாதனங்களையும் அதிகரிப்பது
   (2) புதுப்புது நோய்களுக்கான மருந்துகளைக் கண்டுபிடித்தல்
   (3) இயற்கையோடு இயைந்து வாழுதல்

8. இப்பந்தியில் குறிப்பிடப்படும் பிரதான கருத்து
   (1) சூழல் மாசடைவால் ஏற்படும் பாதிப்பு பற்றியது
   (2) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் பற்றியது
   (3) புதுப்புது நோய்கள் தோன்றுவது பற்றியது

9. தமயந்தியின் வயது இப்பொழுது 36 ஆகும். தமயந்திக்கு 24 வயதாக இருக்கும் பொழுது வர்சன் பிறந்தான். இன்னும் 5 ஆண்டுகளின் பின்னர் வர்சனின் வயது என்ன?
   (1) 12 (2) 17 (3) 20

10. எனக்கு ஓர் அண்ணாவும் ஓர் அக்காவும் இரண்டு தம்பிகளும் உள்ளனர். எனது அம்மாவுக்கு மூன்று ஆண் பிள்ளைகள் மட்டுமே உள்ளனர். எனவே நான்
   (1) ஓர் ஆண் பிள்ளையாவேன்
   (2) ஒரு பெண் பிள்ளையாவேன்
   (3) இத் தகவல்களைக் கொண்டு நான் ஆணா அல்லது பெண்ணா என்பதைத் தீர்மானிக்க முடியாது.


# தொண்டமானாறு தனு வெளியீட்டகம்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை**
**வினாத்தாள் I இற்கு பயிற்றுவிப்பதற்கான பரீட்சை - 2020**

**எண்: 2** **விவேகப்பரீட்சை** 12 நிமிடங்கள்

✷ 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கீறிடுக.

❖ உருவில் தரப்பட்டுள்ள மாதிரித் தராசு சமநிலையில் உள்ளது. இதனைக் கவனித்து 1, 2 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



1. இதற்கேற்ப ● இற்கு சமனான வடிவங்கள்

(1) ▲ ▲ (2) ■ ■ (3) ▲ ■

2. ■ ■ ▲ இற்குச் சமனான வடிவங்கள்

(1) ● ● ● (2) ● ■ ▲ (3) ● ●

❖ 3, 4 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

3. சத்தம் என்பதற்கும் சபதம் என்பதற்கும் சதம் போல பண்டம் என்பதற்கும் பட்டம் என்பதற்கும் ................................

(1) பணம் (2) படம் (3) தடம்


4. தீவனம் என்பதற்கும் கவனம் என்பதற்கும் வனம் போல விரதம் என்பதற்கும் ................................ என்பதற்கும் ரதம் ஆகும்.

(1) புரதம் (2) காரணம் (3) நரகம்

❖ 5, 6 வினாக்களிலுள்ள எண் தொடர்புகளைக் கண்டறிந்து வினாக்குறியுள்ள கூட்டுக்குள் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

5. (7) —— (2) (35) —— (9) (?) —— (6)

(1) 23 (2) 11 (3) 29

6. 



(1) 6 (2) 16 (3) 18


7. இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே 7, 4, 2 என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டன. மூன்று விளையாட்டுக்களில் பங்குபற்றி இம் மூன்று இடங்களுக்குள்ளும் வந்த ஒரு மாணவன் மொத்தமாக 16 புள்ளிகளைப் பெற்றிருந்தான். இம் மாணவன் இம்மூன்று இடங்களில் எந்த இடத்தைப் பெற்றிருக்க மாட்டான்?

(1) முதலாம் இடம் (2) இரண்டாம் இடம் (3) மூன்றாம் இடம்

8. 318, 429, 97, 561, 186, 775 ஆகிய எண்களை இறங்குவரிசையில் எழுதும் பொழுது அமையும் மூன்றாம் எண்ணினதும் ஆறாம் எண்ணினதும் கடைசியில் இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகை


(1) 15 (2) 18 (3) 16

9. 

மேலே தரப்பட்டுள்ள கணிதத் தொடர்பைக் கவனிக்குக. ஒரே உருக்களுக்கு ஒரே பெறுமதியே உண்டு. இங்கு  குறிக்கும் பெறுமானம் யாது?

(1) 4 (2) 5 (3) 2

10. A, B, C, D, E, F எனப் பக்கம் ஒவ்வொன்றும் பெயரிடப்பட்ட ஒரு சதுரமுகியின் பல்வேறு வடிவங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.



E என்ற பக்கத்திற்கு எதிரே இருக்கும் பக்கம் எது?

(1) D (2) F (3) C

# தொண்டமானாறு தனு வெளியீட்டகம்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை**


**வினாத்தாள் I இற்கு பயிற்றுவிப்பதற்கான பரீட்சை - 2020**

**எண்: 3** **விவேகப்பரீட்சை** **12 நிமிடங்கள்**

✹ 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கீறிடுக.


❖ 1, 2 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருவின் எண் கோலங்களுக்கேற்ப [?] உடன் பொருந்தும் எண்ணைத் தெரிவு செய்க.

1.




(1) 8
(2) 10
(3) 7

2.




(1) 5
(2) 8
(3) 10


❖ பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 3, 4 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

- குறியீடு ♡ ஐ இரு தடவையும் குறியீடு ✺ ஐ ஒரு தடவையும் குறியீடு ☆ ஐ ஒரு தடவையும் பயன்படுத்தி 2532 என்ற எண் எழுதப்பட்டிருந்தது.
- 2532 உடன் 1000 ஐக் கூட்டிய பொழுது வரும் எண் ☆✺☆♡ என்ற குறியீடுகளில் எழுதப்பட்டிருந்தது.

3. 2532 ஐக் காட்டும் விடை யாது?
(1) ♡☆✺♡ (2) ☆♡♡✺ (3) ♡✺☆♡

4. ✺☆✺♡ என்ற வடிவம் குறிக்கும் எண் யாது?
(1) 5352 (2) 3532 (3) 2523


5.



தரப்பட்ட உருவில் காணப்படும் முக்கோணிகளினதும் செவ்வகங்களினதும் எண்ணிக்கை முறையே
(1) 4 உம் 5 உம்
(2) 6 உம் 4 உம்
(3) 5 உம் 5 உம்

6. குறித்த ஒரு நேரத்தில் வாகனப் பாதுகாப்பு நிலையமொன்றில் 20 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 25 முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றிலிருந்து அறவிடப்பட்ட மொத்தக் கட்டணம் ரூபாய் 1150.00 ஆகும். 10 முச்சக்கர வண்டிகளில் இருந்து அறவிடப்பட்ட மொத்தக் கட்டணம் ரூபாய் 300.00 எனின் ஒரு மோட்டார் சைக்கிள்களுக்கு அறவிடப்பட்ட கட்டணம் எவ்வளவு?
(1) ரூபாய் 20.00 (2) ரூபாய் 30.00 (3) ரூபாய் 15.00


❖ நேர்கோட்டில் அமைந்த அளவுமுறையும் கடிகாரமுகம் ஒன்றும் தொடர்புபடுத்தப்பட்டுள்ள முறையைக் கவனியுங்கள்




இதற்கமைய பின்வரும் நேர்கோட்டு அளவு முறையைக் கொண்டு 7, 8 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




7. B என்ற புள்ளி குறிக்கும் நேரத்தைக் காட்டும் கடிகார முகம் எது?



(1) (2) (3)

8. C என்ற புள்ளி குறிக்கும் நேரமானது
(1) சூரியன் உதிக்கும் நேரத்தைக் குறிக்கின்றது.
(2) சூரியன் அஸ்த்தமிக்கப் போகும் நேரத்தைக் குறிக்கின்றது.
(3) சூரியன் உச்சி வானில் தோன்றும் நேரத்தைக் குறிக்கின்றது.

❖ M, L, S, T, R என்னும் ஐந்து நகரங்கள் வடக்குத் தெற்காகச் செல்லும் ஒரு நேர்ப்பாதையில் அமைந்துள்ளன. இவை அமைந்துள்ள விதம் பின்வருமாறு தரப்படுகின்றன.

- M என்ற நகரத்திற்கு வடக்கே R என்ற நகரம் அமைந்துள்ளது.
- M இற்கும் R இற்கும் நடுவில் T என்ற நகரம் அமைந்துள்ளது.
- S என்ற நகரத்திற்கு வடக்கே M நகரம் அமைந்துள்ள அதேவேளை S இற்குச் தெற்கே L என்ற நகரம் அமைந்துள்ளது.

9. இந்நகரங்களிடையே நடுவில் அமைந்துள்ள நகரம் எது?
(1) R (2) M (3) S

10. இந்நகரங்களிடையே எந்தெந்த நகரங்களுக்கு இடையிலான தூரம் அதிகமாகும்?
(1) S இற்கும் R இற்கும் இடையில்
(2) T இற்கும் L இற்கும் இடையில்
(3) R இற்கும் L இற்கும் இடையில்

# தொண்டமானாறு தனு வெளியீட்டகம்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை**

**வினாத்தாள் I இற்கு பயிற்றுவிப்பதற்கான பரீட்சை - 2020**



**எண்: 4**

## விவேகப்பரீட்சை

**12 நிமிடங்கள்**

**✸ 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கீறிடுக.**

❖ பின்வரும் உருக்களை அடிப்படையாகக் கொண்டு *1, 2* ஆகிய வினாக்களுக்கு விடை தருக.





A B C D E

1. ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவற்றைக் குறிக்கும் எழுத்துக்கள்
   (1) ABC (2) ADE (3) BCD


2. B, C, E ஆகிய மூன்றுக்கும் இடையில் தொடர்பொன்றை ஏற்படுத்தக்கூடிய பொருத்தமான சொல்
   (1) நீர் (2) பயணம் (3) பயிர்


❖ 3, 4 ஆகிய வினாக்களில் தரப்பட்ட உருக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

3. 



(1) (2) (3)

4. 




(1) (2) (3)

❖ 5, 6 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள எழுத்துக்களிடையே பழமொழி ஒவ்வொன்று மறைந்துள்ளது. சரியான எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி பழமொழியைக் கண்டுபிடிக்குக.

5. அகமழுத் ரதஅபிகள் விளைநி பாவல்குற்றிடி சக்மகுரம்தி
   (1) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
   (2) அழுத பிள்ளை பால் குடிக்கும்
   (3) கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை

6. காவகுற் ரறுங்மகின்ள் கைரப் ரமி பூகொமாதலை போவதலகு
   (1) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
   (2) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
   (3) குரங்கின் கைப் பூமாலை போல

❖ செடிகள், மனிதருக்கு உணவு தரும் மரங்கள், தாவரங்கள், தளபாடம் செய்ய உதவும் மரங்கள் ஆகியவற்றுக்கிடையேயுள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகை குறிக்கப்பட்டுள்ளன.




7. செடிகள் என்பதை வகை குறிக்கும் எழுத்து யாது?
   (1) A (2) B (3) C

8. X எனக் குறிக்கப்பட்டுள்ளதற்கு பொருத்தமானது
   (1) மாமரம் (2) ஆலமரம் (3) வாழை மரம்

9. ஒரே திசையைப் பார்த்துக் கொண்டு ஒருவர் பின் ஒருவராக நிற்கும் வரிசையொன்றில் கமலன் அவ்வரிசையின் நடுவில் நிற்கின்றான். கமலனுக்குப் பின்னால் அடுத்ததாக நிற்கும் நிரோசன் அவ்வரிசையின் முதலாவது ஆளிலிருந்து 14 ஆம் இடத்தில் நிற்கின்றான். எனவே அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் நிற்கின்றனர்?
   (1) 29 பேர் (2) 25 பேர் (3) 24 பேர்

10. குறித்த ஒரு நாளில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டி ஒன்றில் கட்டுரைப் போட்டி மு.ப. 9.30 தொடக்கம் மு.ப. 11.00 மணிவரையும் கவிதைப் போட்டி மு.ப. 10.15 தொடக்கம் மு.ப. 10.45 வரையும் பேச்சுப் போட்டி மு.ப. 10.30 தொடக்கம் மு.ப. 11.15 வரையும் நடைபெற்றன. மூன்று நிகழ்வுகளும் ஒன்றாக நிகழ்ந்த நேர அளவு யாது?
   (1) 30 நிமிடங்கள் (2) 45 நிமிடங்கள் (3) 15 நிமிடங்கள்


**எண்: 5**

## விவேகப்பரீட்சை




12 நிமிடங்கள்

✷ 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கீறிடுக.



❖ தரப்பட்ட உருவைக் கவனித்து 1, 2 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




1. மேலே காட்டப்பட்டுள்ள உருவை A வழியே பார்க்கும் பொழுது எவ்வாறு தோன்றும்?

(1)    (2)    (3) 


2. மேலே காட்டப்பட்டுள்ள உருவை B வழியே பார்க்கும் பொழுது எவ்வாறு தோன்றும்?

(1)    (2)    (3) 

3. ஒரு வீட்டில் ஆடுகளும் கோழிகளும் வளர்த்தனர். இவற்றின் எண்ணிக்கை ஒன்றுக்கொன்று சமனாகும். இவை இரண்டினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை 48 ஆகும். எனவே அவ்வீட்டில் வளர்க்கும் ஆடுகளினதும் கோழிகளினதும் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 24   (2) 16   (3) 20

4. சதுரமுகியின் பக்கங்கள் சதுரங்களாக வரையப்பட்டு படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்று நிறம் தீட்டப்பட்டுள்ளது.



இச்சதுரமுகியின் எல்லாப் பக்கங்களும் இவ்வாறு நிறந்தீட்டப்பட்டிருப்பின் நிறந் தீட்டாத சதுரங்கள் எத்தனை இருக்கும்?

(1) 30   (2) 15   (3) 24

5. "பம்பரம்" என்ற சொல்லை எண்குறியீட்டில் எழுதினால் பின்வருவனவற்றில் எது சரியாகும்?

(1) 21431   (2) 71213   (3) 75735

6. A என்பவன் மேற்கில் இருந்து 100 m கிழக்கு நோக்கி நடந்து பின்னர் அங்கிருந்து வடக்கு நோக்கி 50 m நடந்து அவ்விடத்தில் நிற்கிறான். B என்பவன் A புறப்பட்ட இடத்திலிருந்து புறப்பட்டுத் தெற்கு நோக்கி 70 m தூரம் நடந்து, பின்னர் அங்கிருந்து 100 m கிழக்கு நோக்கி நடந்து சென்று அவ்விடத்தில் நிற்கின்றான். A , B ஆகிய இருவருக்குமிடையேயுள்ள தூரம் எவ்வளவு?

(1) 170 m (2) 30 m (3) 120 m

❖ *பின்வரும் பந்தியில் இரண்டு பகுதிகள் வெட்டி நீக்கப்பட்டுள்ளன. அவ்வாறு வெட்டி நீக்கப்பட்ட இரண்டு பகுதிகளையும் தெரிவு செய்து 7, 8 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.*

பூமிக்கு மழை [ A ] நீர் கிடைக்கின்றது. மழை மூலம் கிடைக்கும் நீர் பல்வேறு வழிகளில் மறுபடியும் [ A ] வளியுடன் சேர்கின்றது. புவியின் மேற்பரப்பில் உள்ள நீர் ஆவியாகி விடுகிறது. [ A ] நடைபெறும் ஆவியீர்ப்பு செயன் முறையினாலும் நீர் ஆவியாகி வளியுடன் [ A ] ஆறு, குளம், கடல், நீர்த்தேக்கங்கள் [ B ] உள்ள நீரும் ஆவியாகி வளியுடன் சேர்கின்றது. இந்த நீராவியில் [ B ] வளி வானுக்குச் செல்லும் போது குளிர்ச்சியடைந்து முகில்களாக மாறுகின்றன. [ B ] இருக்கும் நீர்த்துளிகள் மறுபடியும் மழையாகப் பூமியில் பெய்கின்றது. இச் செயற்பாடு [ B ] திரும்பத் திரும்ப நடைபெறுகின்றது.

7. வெற்றிடம் A யிற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1) காரணம் / நீராவி / தாவரங்கள் / சேர்ந்தன.

(2) காரணமாகவே / நீராவியாக / தாவரங்களில் / சேர்கின்றது.

(3) காரணத்துடன் / நீராவியாகி / தாவரங்களுக்கு / சேர்கின்றது.

8. வெற்றிடம் B யிற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1) ஆகியன / உள்ள / முகில்களுடன் / சக்கரமாக

(2) ஆகியவற்றுடன் / உள்ளவை / முகில் / சக்கரமான

(3) ஆகியவற்றில் / உள்ள / முகில்களில் / சக்கரமாக

❖ *பின்வரும் விபரங்களைக் கொண்டு 9, 10 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.*

கபிலன், மனோஜா, கவித்திரா, ராகவன் ஆகியோர் ஒரே வகுப்பில் கல்விகற்கும் மாணவர்கள். கணிதபாடச் சோதனை ஒன்றில் இவர்களில் கவித்திரா ராகவனைவிடக் கூடிய புள்ளியைப் பெற்றாள். எனினும் கபிலனைவிட குறைந்த புள்ளியையே பெற்றாள். இந்நான்கு பேரில் மனோஜா மூன்றாம் இடத்தைப் பெற்றாள்.

9. இந்நான்கு பேரில் மிகக்குறைந்த புள்ளியைப் பெற்றவர் யார்?

(1) கவித்திரா (2) ராகவன் (3) மனோஜா

10. இந்நான்கு பேரில் இரண்டாம் இடத்தைப் பெற்றவர் யார்?

(1) கபிலன் (2) கவித்திரா (3) ராகவன்